| IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARAKKONAM, RANIPET DISTRICT. | | | | |
|---|---|---|---|---|
| PAGE NO.25/2020 | | | | |
| DEPOSITION OF WITNESS | | | | |
| (Chapter XXIII of Criminal Procedure) | | | | |
| Calender | : | CC.52/2017 | | |
| Miscellaneous | : | | | |
| Preliminary Register | : | | | |
| Sessions | : | | | |
| Deposition of witness for | : | Prosecution | : | PW-2 |
| | | Defence | : | |
| | | Court | : | |
| Name | : | வெங்கடேசன் | | |
| Father's Name | : | ஆறுமுகம் | | |
| Village | : | பெருங்களத்தூர் | | |
| Taluk | : | அரக்கோணம் | | |
| Caste | : | - | | |
| Calling | : | விவசாய வேலை செய்கிறேன் | | |
| Religion | : | இந்து | | |
| Age | : | 39 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 29.12.2020

***மு.வி.சத்தியப்பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.***

***சுமார் 5 வருடத்திற்கு முன்பு நான் திருத்தணிக்கு போகலாம் என்று 10.45 மணி அளவில் ரோட்டில் வந்துக்கொண்டு இருந்தேன். எனது பெரியம்மா கொள்ளபுரிக்கு முஸ்லிம் நகரிடம் விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். ஊரில் இருந்தவர்கள் சொன்னார்கள். விபத்து நடந்த உடனே அந்த இடத்திற்கு சென்றேன். கார் இடது பக்கம் வந்ததாகவும், எனது பெரியம்மா வலது பக்கம் வந்ததாகவும், கார் அடித்ததில் 40 அடி தொலைவில் சென்று விழுந்ததாகவும், அவர் பஸ் ஸ்டாப்பில் பஸ்சிற்காக இருந்ததாகவும் சொன்னார்கள். விபத்து ஏற்படுத்தியது சிகப்பு கலர் வண்டி கார் எண்.டி.என்.73ட்டி8044 ஆகும். விபத்து ஏற்படுத்திய நபரை நான் பார்க்கவில்லை. விபத்து நடந்தவுடன் அழைத்து***

சென்றுவிட்டார்கள். எனது பெரியம்மாவை அரசு மருத்துவமணைக்கு அழைதத்து சென்றார்கள் அவர் இறந்திருந்தாரா என்று சந்தேகமாக இருந்தது ஙேகு இறந்துவிட்டதாக சொன்னார்கள். வண்டிக்கு சம்பந்தப்பட்ட நபர் ஒருவர் கேஸ் வேண்டாம் சமாதானமாக போகலாம் என்று சொன்னார். காரை யார் ஓட்டிவந்தார்கள் என்று தெரியுமா என்றால் எனது ஊர்காரர் பாதாரத்தினுடைய அண்ணன் மருமகன் என்று சொன்னார்கள் அவர் பெயர் தெரியாது. காவல் நிலையத்திற்கு நான் எனது அம்மா சின்னபொன்னு எனது அப்பா ஆறுமுகம், நந்தகுமார், ஆகியோர் அரக்கோணம் கிராமிய காவல் நிலையத்தில் புகார் அளிக்க சென்றோம். என் அம்மா புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

கு.வி.

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது கேள்விப்பட்டு தான் வந்தேன் என்றால் சரிதான்.